# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற் பெட்டி இலக்கம்: 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ சித்திரை 1977 — இதழ் - 16

## புதுவருடம்






அடுத்து வரும் புத்தாண்டு பிங்கள வருடமாகும். பிங்கள வருடப்பிறப்பு வருகின்ற 13-4-77 புதன்கிழமை பிற்பகல் நான்கு மணி இருபத்தேழு நிமிடமளவில் 4 - 27 அபரபட்ச ஏகாதசித் திதியும் அவிட்ட நட்சத்திரத்தின் மூன்றும் பாகமும் சேர்ந்தவேளையில் ஆரம்பமாகிறது என்பர். அன்று நண்பகல் முதலாக முன்னிரவு 8 - 27 வரை விஷு புண்ணியகாலம் என்பர்.

இவ்வேளையில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்துச் சிரசில் கடப்பமிலையும் காலில் வேப்பமிலையும் வைத்து நீராடிப் புத்தாடையணிந்து கடவுள் வழிபாடாற்றி வீட்டிற் சூரிய பொங்கல் செய்து தான தருமஞ் செய்து மகிழ்ந்திருத்தல் வழக்கமாகும். மங்கலகரமான இப் புத்தாண்டில் மில்க்வைற் ஆதரவாளர்கள் அபிமானிகள் அன்பர்கள் யாவருக்கும் எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். என்றும் எப்போதும் தங்கள் ஆதரவு எங்களுக்கு வேண்டும்.

சுபம்.



சுவாமி விவேகானந்தரின் கதையை வில்லுப் பாட்டாகக் கொத்தமங்கலம் சுப்பு பாடியுள்ளார். இப் பாடல்களை நூல் வடிவாக்கி இராமகிருஷ்ண மண்டபக் கட்டட நிதிக்காக வெளியிட்டவர் மில்க்வைற் தொழிலதிபர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்யாலய மண்டபத்தில் முன்னாள் அதிபர் அம்பிகைபாகன் அவர்கள் தலைமையில் நூலை மில்க்வைற் தொழிலதிபர் வெளியிட்டபோது எடுத்த படம்.

### எலுமிச்சம்பழக் கோதுகள்

தாங்கள் வீட்டுத் தேவைக்கு உபயோகித்து எறிந்துவிடும் எலுமிச்சம் பழக்கோதுகளை நன்றாக வெயிலில் உலர்த்திக் காயவிட்டுச் சேமித்து மில்க்வைற் தொழிலகத்திற்குத் தாருங்கள்.

உங்களுக்கு விலைதந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுவோம்.

எலுமிச்சம்பழக் கோதுகள் எமக்குத் தேவை.

★ ஔவையார் போற்றிய ஔடதம் பனை ★

உ




## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருவிடைமருதூர் — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

முந்தையார் முந்தியுள்ளார் மூவர்க்கு முதல்வரானார்
சந்தியார் சந்தியுள்ளார் தவநெறி தரித்து நின்றார்
சிந்தையார் சிந்தையுள்ளார் சிவநெறி யனைத்துமானார்
எந்தையார் எம்பிரானார் இடைமரு திடங்கொண்டாரே.

முன்னைப் பொருள்களுக்கெல்லாம் முன்னைப் பொருளாய் உள்ளவர். அயன், அரி, அரன் என்னும் மும்மூர்த்திகளுக்கும் முதற்பொருளானவர். காலையிலும் மாலையிலும் சந்தியாவந்தனஞ் செய்யும் சரியையாளர், கிரியையாளர், யோகியர், ஞானியர் என்பாரின் சந்தியானத்திலும், அச்சந்தியர்வேளைகளில் விளங்கும் திருவருளாய் இருந்தருளுபவர். மேலான தவநெறியைத் தாங்கிநின்ற பெரியாரின சிந்தையில் உறைபவர். சிவநெறி எனக் கூறப்பெறும் அகச்சமய நெறிகளில் விளங்குபவர், எமது பரமபிதாவானவர், எங்கள் பிரியத்துக்கு உரியவர், திருவிடைமருதூர் என்னும் திவ்வியத் தலத்திலே எழுந்தருளியுள்ளார். ★




## செங்கோன்மை

செவ்விய கோல் போன்று அரசாங்கத்தாற் செய்யப்படும் முறையின் தன்மை

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

நாட்டைக் காக்கும் அரசாங்கம் நீதி தவறாமல் பரிபாலித்தால், அந்த நீதியே அரசாங்கத்தைப் பாதுகாக்கும்.

**The proper sway of the sceptre.**

*The government protects the land and justice protects it if unfailingly administered.*

இன்று உன்னால் கூடியமட்டும் நன்றாகச் செய். நாளை அதினிலும் நன்றாகச் செய்யும் ஆற்றல் நீ பெறக்கூடும்.
— நியூட்டன்

## பேச்சுத் தமிழில் அடுக்குமொழி

1. அணிந்து புனைந்து
2. அணைத்து ஆதரித்து
3. அதட்டி மிரட்டி
4. அதட்டி உருட்டி
5. அதட்டி விரட்டி
6. அதிகாரம் ஆதிக்கம்
7. அதிர்ச்சி மிரட்சி
8. அந்தமும் ஆதியும்
9. அந்தி சந்தி
10. அப்பு அழுக்கு
11. அமுக்கி அழுக்கி
12. அமைதியும் அடக்கமும்
13. அரட்டல் புரட்டல்
14. அரனை சரனை
15. அரதேசி பரதேசி
16. அரிய பெரிய
17. அருமை பெருமை
18. அல்லறை சில்லறை
19. அல்லும் பகலும்
20. அல்லல் தொல்லை

## சங்குஸ்தாபன விழா

கோண்டாவில் கிழக்கிலுள்ள வல்லிபுரநாதர் ஆலயத்தின் கர்ப்பக்கிருகம் புதிதாகக் கட்டப்படுவதற்குச் சங்குஸ்தாபன விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிராம சேவகர்கள், சட்டத்தரணிகள் மற்றும் பெரியோர்கள் மத்தியில் நடைபெற்ற இவ் விழாவில் திரைப்பட உரிமையாளர் தியாகராசாவும், மில்க்வைற் தொழிலதிபர் கனகராசாவும் பங்குபற்றி ஆசரவளித்தனர். மில்க்வைற் தொழிலதிபர் இவ்விழாவில் கலந்து 30-3-77 புதன்கிழமை ஆதிமூலத்திற்கான சங்குகளை ஸ்தாபித்தார்கள். அத்திவாரம் தொடர்ந்து நடைபெறுகிறது.

## வேண்டாப் பொருள்களின் விழுமிய பயன்

வேண்டாப் பொருள்கள் என்றும் கழிவுப் பொருள்கள் என்றும் நாம் சழித்து விடும் எந்தப் பொருளுக்கும் விதம் விதமான உபயோகங் காணுதல் விவேகமாகும். கைத்தொழில் வளம் அதிகரித்து வளரும் மேற்கு நாடுகளில் எதையும் வீணாக்கமாட்டார்கள். காகிதக்குப்பைகள், உடைந்த கண்ணாடித் துண்டுகள் புது உற்பத்திக்கு வெகுவாக உதவுகின்றன.

அதிர்ஷ்டக்குறைவால் ஆனந்தம் கிடைக்காமல் இருக்கலாம், ஆனால் அவனவனே, தன்னை இழிவானவனாக்கிக் கொள்கிறான்.
— கார்லைல்

★ ஏழைகட்கும் செல்வர்கட்கும் இரங்குவது பனை ★

# ★★★★ சத்தியமே வெல்லும் ★★★★

சத்தியம் ஒன்றுதான் வெல்லும் என்பது உபநிடத் வாக்கியம். அது பாரதநாட்டின் அரச சுலோகமாக அமைந்துள்ளது. பாரதத்தின் வடக்கிலாயினும் தெற்கிலாயினும் சத்தியமே சிறந்த பண்பு. உலகம் போற்றும் திருவள்ளுவர் சத்தியத்தை உண்மை, வாய்மை, மெய்மை என முக்கரண சுத்திக்கும் வேண்டும் என்பர். நல்லற வழியில் நின்று சத்திய சோதனையைச் செய்து வெற்றி கண்டவர் மகாத்மாகாந்தியடிகள். பேசமுடியாத பெருமை பெற்றது சத்தியம் என்பதில் மேலைத் தேசத்து மெய்யியல் வல்லுநரும் கருத்தொருமித்துள்ளார்கள்.

### அரிச்சந்திரன்

பூவுலகில் சத்தியம் தவறாத உத்தமர்கள் இருக்கிறார்களோ என்று தேவலோகத்தவர் சந்தேகித்தனர். ஏன் அயோத்தியில் அரிச்சந்திரன் சத்தியந் தவறாதவன் என்று வசிட்ட முனிவர் கூறினார். இல்லை அவன் நித்தம் நூறு பொய் பேசுபவன் என்று விசுவாமித்திரர் கூறினார். அவனைக்கொண்டு பொய் பேசுவிப்பதாகச் சபதங் கூறினர்.

விசுவாமித்திரர் முன்னர் அரசனாய் இருந்தவர். அரசவாழ்வைத் துறந்து கடுந்தவஞ் செய்து முனிவரானவர். அவருக்குப் பூவுலகில் தனி மரியாதை இருந்தது. அவர் அரிச்சந்திரன் அரசுபுரிந்த அயோத்திக்குச் சென்றார். அவரை அரசாங்க மரியாதையுடன் அரிச்சந்திரன் வரவேற்றான். அரசனே நான் பெரிய வேள்வி செய்யப் போகிறேன். அதற்குப் பெருந்தொகையான பொன் வேண்டும் என்றார் அரிச்சந்திரன் மகிழ்வுடன் தந்தேன் என்று வாக்குறுதி கூறினான். எனக்குரிய பொன் உன்னிடமே இருக்கட்டும். இனியொரு வேளை வந்து எடுத்துக் கொள்கிறேன் என்று கூறி முனிவர் ஏகினார்.

தவமுனிவரின் சூழ்ச்சியால் அரிச்சந்திரனுக்குத் தாங்க முடியாத துன்பங்கள் சூழ்ந்தன. பொன்னைக் கொடுக்கும் செல்வ நிலையுங் குன்றியது. அவ்வேளை முனிவர் அவனிடம் சென்றார். ''அரசனே நீ எனக்குப் பொன் தருவதாக் உறுதி கூறவில்லை என்று சொல். நான் போய் விடுகிறேன்'' என்றார். அரசன் பொய் சொல்ல மறுத்துத் துன்பங்களிடையே அரசைத் துறந்து மனைவியையும் மகனையும் அடிமையாக விற்று முனிவரின் பொன்னைக் கொடுத்தான்.

சுடலை காக்கும் தொழிலாளிக்கு வேலையாளாகும் நிலைமையிற்கூட அரிச்சந்திரன் பொய் கூறவில்லை. அடிமையாகிப் போன தன் மகன் இறந்த போதும் அவன் பொய் சொல்லவில்லை. தன் அரசமாதேவியாய மனைவி கொலைகாரி எனக் குற்றஞ் சாட்டப் பட்டபோதும் அவன் பொய் சொல்லவில்லை. இறுதியில் தன் மனைவிக்குக் கொலைத் தண்டனை விதிப்பதற்கு வாளெடுத்தபோதும் அவன் கதி யிழக்கினும் கட்டுரையிழக்கிலேன் எனப் பொய் கூறவில்லை. அவன் புகழை உலகம் அறிந்தது. இன்றும் சத்திய விரதன் என அவனைப் புலவர் போற்றுகின்றார்கள்.

நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்.

## சிவானந்த சீலம்



அளந்து பேசு.
அறிவோடு வாழ்.
மெய்யே பேசு.
இனிமையாகப் பேசு.
நேர்வழியில் நட.
நேர்மையாக நட.
உறுதியாகத் தீர்மானி.
மனப்பூர்வமாக நம்பு.
விடாது தியானி. தவறாது உள்நோக்கு.
பூரணமாக அறிந்துகொள். நிலைத்த சாந்தி பெறு.

## இலை உதிருங்காலம்

உதிர்ந்த இலைகள் உரமதாகும் என்பதை எவரும் அறிவர். அறிந்தும் என்ன ஒவ்வொரு நாளும் கடகக் கணக்கான சருகுகளையும் பழுத்த இலைகளையும் கூட்டி அள்ளி வீதிகளில் குவித்துவிடுகிறார்கள். மாநகரசபையினர் அவற்றைக் குப்பையோடு குப்பையாக அள்ளிக்கொண்டு சென்று கடற்கரையையும் பள்ளங்களையும் நிரப்புகிறார்கள். பசுந்தாள் பசளை பருவகாலந்தோறும் இறைவன் தருகின்ற வரப்பிரசாதம். அறுவடைக்குப்பின் வயலை உழுது பசளையிடுவதற்குப் பருவத்தே கிடைக்கின்ற பசளை படும் பாட்டைப் பார்த்தும் பாராமல் இருக்கிறார்கள் விவசாயிகள். அவர்கள் இறக்குமதியாகும் உடன் பசளைகளில் கைபடிந்தமையால் இயற்கைப் பசளைகளைப் புறக்கணிக்கிறார்கள்.

கொம்போஸ் உரம் தயாரிப்பதற்கு மாட்டின் சாணமும் சருகுகளும் மிகவும் அருமையானவை என்பது எல்லோருக்கும் தெரியும். தெரிந்தும் அதனைத் தயாரிப்பதற்கு முன்வருகிறார்களில்லை. அநுபவமுள்ள கமக்காரர் உதிரும் இலைகளை உடனடியாகப் பயன்செய்து வழிகாட்டுவார்களாக. எதனையும் வீண்போக விடாமல் பயன்செய்வது தமிழர் பண்பாடு. ★

## 1977 — ஏப்பிரல் மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 1 | வெள்ளி | பிரதோஷம் |
| 3 | ஞாயிறு | பூரணை- கோணேஸ்வரம் கொடி |
| 5 | செவ். | காரைக்காலம்மை குருபூசை |
| 8 | வெள்ளி | பெரிய வெள்ளி |
| 13 | புதன் | பிங்கள வருடப் பிறப்பு (மருதடி விநாயகர் தேர்) |
| 15 | வெள்ளி | பிரதோஷம் (நீர்வேலி சுந்தசுவாமி கொடி |
| 18 | திங்கள் | அமாவாசை |
| 19 | செவ். | வண்ணை காமாட்சி கொடி |
| 20 | புதன் | கார்த்திகை |
| 24 | ஞாயிறு | நல்லூர் கைலாச பிள்ளையார் கொடி |
| 29 | வெள்ளி | திருநெல்வேலி சிவன்- கொடி |

★ பனையைத் தறிக்காதே பயனைக் குறைக்காதே ★

## சிவானந்தர் வழியில் சிதானந்தர் அருளுரை



★

உங்களுடைய எண்ணத்திற்கு அமைய உங்கள் எதிர் காலம் அமையும். ஆகையால் எப்பொழுதும் நல்ல எண்ணங்களையே எண்ணி எண்ணி அப்பியாசஞ் செய்யுங்கள். இதுவே வெற்றி என்னும் இரகசியத்துக்குத் திறவுகோல். மனிதன் யோசித்து யோசித்துக் கெட்ட எண்ணங்களில் சிக்கிக்கொண்டால் அடிக்கடி பிடிவாதமாக நல்ல எண்ணங்களின் பக்கமாக மனதைத் திருப்பிவிடல் வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் ஏதாவது ஒன்று செய்யமுடியும்.

## தமிழ் நாட்டில் ஒரு முதுகண்

மூவேந்தரும் பல்லவரும் நாயக்கரும் பிறரும் சைவமும் தமிழும் வளர்த்த தமிழ் நாட்டிலே வாழையடி வாழையாகச் சில தமிழ்க் குடும்பங்கள் நிலையான சைவத் தொண்டுகள் செய்து வந்தன. புகழ் பூத்த கயப்பாக்கம் என்னும் பதியிலே சதாசிவஞ் செட்டியாரென்பார் முப்பதாண்டுகளுக்கு மேலாகப் பன்னிரு திருமுறைகளையும் பத்தியோடு பயின்று திருமுறைப் பூசை செய்தவர்கள். அவர் தமது பயிற்சி முதிர்ச்சியின் விளைவாக அகத்திய முனிவர் அரிதிற்றிரட்டிய தேவாரத் திரட்டுக்கு ஒர கலவுரை எழுதியுதவியவர்கள். அவர்களுடைய தம்பியாரின் தவப்புதல்வர் உயர்திரு சோமசுந்தரம் செட்டியார் விநாயகப் பெருமானின் திருவருளை முன்னிட்டுத் திருமுறைத் தொண்டும் சித்தாந்த சமயத் தொண்டுஞ் செய்து இன்று தமிழ் நாட்டின் முதுகண்ணாய் எண்பதாண்டுகள் நிரம்பி ஆயிரம் பிறை காணும் பேறுபெற்று வாழ்கின்றார்கள். இவர்களின் தொண்டின் பெருமையைச் சேய் நாடாகிய ஈழத்திருப்பவர் சார்பில் பாராட்டி வாழ்த்திப் போற்றுகிறோம். இவர் தொண்டு வெல்க. இவர் வாழ்க.

இங்ஙனம்

திருஆலவாய்,
யாழ்ப்பாணம்.

க. கனகராசா
மில்க்வைற் தொழிலதிபர்

## காரைக்காலம்மையார்

புனிதவதியார் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்ட அம்மையார் அறுபத்து மூன்று தனியடியார்களில் ஒருவர். மானமிகு தருமத்தின் வழிநின்ற பெருங்குடி வணிகன் தனதத்தன் செய்த பெருந் தவத்தால் பெற்றெடுத்த பெண் குழந்தை அவர். பொங்கிய பேரழகி என்றும் மயிலைப் புறங்கொள் சாயல் மகள் என்றும் இனிய மொழியினவள் என்றும் சேக்கிழார் சுவாமிகள் போற்றும் இப் பெண்ணை நல்லாளை நாக பட்டினத்துப் பெரு வணிகன் பரமதத்தன் என்பான் விரும்பித் திருமணஞ் செய்தான்.

இவர்களுடைய இல்வாழ்க்கை வெகுசிறப்பாக நடைபெற்று வந்த காலத்தில் மனைவியின் கடவுள் பக்தியையும் அவரிடம் வெளிப்பட்ட திருவருட் செயல்களையும் கண்ட கணவனார் மெதுவாக மனைவியாரை விட்டுப் பிரிந்து தான் வேறொரு பெண்ணை மணந்து, பெற்ற பெண் குழந்தைக்குப் புனிதவதி என்றே பெயரிட்டு மகிழ்ந்திருந்தான். இவ்வாறாக இறைவழியில் வாழ்ந்த முதல் மனைவியாரை அவர்தம் சுற்றத்தார் தனதத்தனிடம் அழைத்துச் சென்ற போது அப் பெருமகன் ''இவர் சாதாரணப் பெண் அல்லர். இவர் கடவுளைக் கண்டவர். தெய்வத் தன்மை உள்ளவர். இவரை நான் வணங்குகிறேன், நீங்களும் வணங்குங்கள்'' என்று கூறி அவரடியில் வீழ்ந்து வணங்கினான்.

கணவனாரின் கொள்கையை உணர்ந்த புனிதவதியார் சுற்றத்தவரை நீத்துச் சிவபிரானை வணங்கித் தமக்குள்ள அழகுக் கோலத்தை நீக்கிப் பேய் வடிவு கொண்டு ஆலய வழிபாட்டில் ஈடுபடுவாராயினர். ஊனுடை வனப்பை எல்லாம் உதறி என்புடம் பேயாக வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய்வடிவங் கொண்ட அம்மையாரைக் காரைக்காலம்மை எனப் போற்றினர்.

காரைக்காலம்மையார் சிவ வழிபாட்டில் பெரிதும் ஈடுபட்டு அற்புதத்திருவந்தாதி, இரட்டைமாலை அந்தாதி முதலிய திருமுறைகளை அருளிச் செய்தார். வடக்கிலுள்ள சிவாலயங்களை வணங்கிய பின் திருக்கைலாயஞ் செல்ல விருப்பங் கொண்டு அப் புனித பூமியைக் காலால் மிதிக்கக் கூடாது எனக் கருதித் தலையினால் நடந்து சென்றார். அவர் செயலைக் கண்டு வியப்புற்ற உலக மாதாவாகிய உமாதேவியாரிடம் இறைவன் ''இங்கே இவ்வண்ணம் வருகின்ற இவள் என் அம்மை'' என்று கூறியபின் அம்மையாரை விழித்து அம்மையே! என்று வரவேற்றார். உடனே அம்மையாரும் இறைவனை அப்பா என அன்பொழுக அழைத்து அவர் திருவடியின் கீழமர்ந்து ஆடல் காணும் பெரும் பேற்றைப் பெற்று மூத்த திருப்பதிகம் பாடியருளினார். அம்மையார் சிவபெருமான் திருவடிக்கு ஆளானது பங்குனி மாதத்துச் சித்திரை நாளாகும். ★




மில்க்வைற்
புதிய தயாரிப்பான
“சேவிங் சோப்”
விற்பனைக்கு வந்துள்ளது

சுத்தமான
வேப்பெண்ணெய்
கலந்து தயாரித்தது.

உங்கள் முக வசீகரத்திற்கும்
சரும பாதுகாப்பிற்கும் சிறந்தது.
❀ இன்றே வாங்கிப் பாவியுங்கள் ❀

★ ஊருக்கு லட்சுமி போன்றது பனை ★

## வழக்கிலுள்ள வடமொழிகள்

| | |
|---|---|
| உபமானம் | ஒப்புப் பொருள் |
| உபயோகம் | பயன் |
| உபராசா | இளவரசன் |
| உபவநம் | பூஞ்சோலை |
| உபாசனை | வழிபாடு |
| உபாதி | நோய் |
| உபாத்தியாயன் | ஆசிரியன் |
| உபாயம் | சூழ்ச்சி |
| உருசி | சுவை |
| உருத்திராக்கம் | சிவமணி |
| உரொக்கம் | கைப்பணம் |
| உரோகம் | நோய் |
| உரோசம் | வெட்கம் |
| உரோமம் | மயிர் |
| உலுத்தன் | ஈயாதவன் |
| உலோபம் | ஈயாமை |
| உல்லாசம் | மகிழ்ச்சி |
| உவாமதி | முழுநிலா |
| உற்சவம் | திருவிழா |
| உற்பாதம் | தீக்குறி |

## இவ்வாறு சொன்னவர் யாவர்?

(விடைகள் வேறிடத்தில்)

1. தான் செய்த தவறுகளை ஏற்பதே தன்மானமாகும்.
2. பிறருக்குத் தொண்டு செய்வதே பிரதானமான தொழில்.
3. புத்தகம் இல்லாத வீடும் யன்னல் இல்லாத வீடும் ஒன்றே
4. திறமையுள்ளவனுக்கு எளிதில் புகழ் உண்டாவதில்லை.
5. இறந்தபின் வரப்போகும் புகழுக்கு அலையக்கூடாது.
6. பெண்ணின் மடியிலே இறையன்பு வளர்கிறது.
7. கட்டுப்பாடு அதிகரிக்கக் கள்ளத்தனம் கூடும்.
8. மகிழ்ச்சியும் உழைப்பும் ஆயுளை அதிகரிக்கும்.
9. குணத்தில் மிகவுயர்ந்தவன் மாறமாட்டான்.
10. மனித ஆசைக்கும் ஆற்றலுக்கும் அளவேயில்லை.

## சரித்திரப் புகழ் பெற்ற வேப்பமரம்

பாரத நாட்டிலே அலகபாத் பிரதேசத்திலே அடர்ந்து வளர்ந்து நிழல் தரும் வேப்பமரம் 1857 ஆம் ஆண்டிலேயே மிகப்பெரிய மரமாக நின்றதால், ஆங்கிலேய அரசாங்கம் இந்திய சுதந்திர வீரர் பலரைத் தூக்கிலிடுவதற்கும் உதவியாய் இருந்தது. அதனைப் பொதுமக்கள் கண்ணெனப் போற்றி வருகின்றார்கள். ★

தாயின் நற்குணங்களும் தந்தையின் பாவங்களும் குழந்தைகளிடம் வருகின்றன.

— சார்ல்ஸ் டிக்கன்ஸ்

## ஆன்ம விசார அருள் வாக்கியங்கள்

1. ஈசுவரன் மேல் அன்பினால் உலகப்பற்று அழிதல் வேண்டும்.
2. ஈசுவர ஐக்கியத்துக்கு வழி ஆன்ம ஐக்கியமாகும்.
3. ஆன்ம ஐக்கியம் இல்லாவிடின் ஈசுவர ஐக்கியம் சித்தியாகாது.
4. பிறருக்குப் பயன் கருதாது உதவி செய்தலே தகுதி.
5. பதில் உபகாரம் செய்ய மாட்டாதவனுக்கு உதவி செய்தல் தகுதி.
6. தீய ஒழுக்கத்துக்குக் காரணம் அஞ்ஞான பந்தம்.
7. எவரும் எந்த நேரத்திலும் மரணத்துக்குரியவரே.
8. நம்மிலும் நமக்கு இனியவன் ஈசுவரன்.
9. பிறர் செய்யும் தீமையைப் பொறுத்தல் புண்ணியம்.
10. செருக்கு அற்றவனிடம் ஈசுவரன் பிரீதியுள்ளவர்.

## கோயிலுக்குப் புதிய வீதி

திருக்கோயிலை வலம் வராத காலினாற் பயனில்லை என்று திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியுள்ளார். வீதியில்லாத கோயிலுக்கு வீதி அமைத்தல் பெரிய தவப்பணி. அது சிவப்பணி. சுன்னாகத்தைச் சேர்ந்த சூராவத்தை முத்துமாரியம்மன் கோயிலைச் சூழ வீதியில்லாத குறையை அவ்வூரவர் போக்கியுள்ளனர். கோயிலைச் சூழவுள்ள காணிச் சொந்தக்காரர் ஆறுபேர் தங்கள் நிலத்தை உபகரித்து வீதி அமைத்துள்ளார்கள். புதிய வீதியை 5-3-77 சனிக்கிழமை மாலை மில்க்வைற் தொழிலதிபர் மங்களகரமாகத் திறந்து வைத்து உபயகாரரை வாழ்த்தினர். ★

நாட்டுப் பாடல்

## கடவுள் துதி

1. மலைக்கு மகாலிங்கம்
   மாமதுரைச் சொக்கலிங்கம்
   தானாய் வளர்ந்த லிங்கம்
   தனுக்கோடி ராமலிங்கம்.

2. வெள்ளி விளக்கெரியும்
   வெண்கலங்கள் ஓசையிடும்
   தங்க விளக்கெரியும்
   சண்முகனார் கோயிலிலே.

3. கூந்தப் பனையோரம்
   குளிராட்டும் கானலிலே
   ஏந்து பலகையிலே
   இருப்பாராம் சண்முகனார்.

தொகுப்பு:- அன்னகாமு

★ ஈவதில் குறைவில்லாதது பனை ★

## ❊❊ பாகற்காய் ❊❊

நம் முன்னோர் உணவாகவும் மருந்தாகவும் கண்டு சொன்ன காய்கறிகளில் பாகற்காயும் ஒன்று. பாகற்காய் அறுசுவைகளில் கைப்புக்கு உகந்தது. பாகற்காய் கபம், பித்தம், இரத்ததோஷம், நீரிழிவு, பாண்டு, புண் குஷ்டம், வயிற்றில் பூச்சி, மந்தம், காமாலை முதலிய நோய்களைப் போக்கும். மலச் சிக்கலை நீக்கும், பூச்சிகளைக் கொல்லும். விரைவில் சமிபாடாவது உதராக்கினியை உண்டாக்குவது. பாகற்காயைச் சமைக்கும் போது வேகவைத்த நீரை வெளியே கொட்டிவிட வேண்டும். கறிக்குப் புளி விடுதல் நன்றாகும்.

பாகற்காயைப் பலவிதமாகப் பதஞ்செய்து கறி சமைப்பார்கள். இது அதிகமாகக் கிடைக்கும் காலத்தில் வற்றலாக்கியும், ஊறுகாயாகத் தயாரித்தும் வைத்திருப்பர், சிறிய பாகற்காயில் உயிர்ச்சத்து மிகுதியாய் இருக்கும்.

பாகற்காய் மருந்தாகப் பயன்படுகிறது. பித்தம் மிகுந்து நோய்கள் உண்டாகும் போது, இதன் சாற்றை காலை வேளையில் பருகிவந்தால் நோய் நீங்கும். கொலரா என்னும் பெரும் பேதி உண்டாகும் போது பாகலிலைச் சாற்றில் அரைப்பங்கு நல்லெண்ணெய் கலந்து பருகினால் நோய் குணமாகும். நீரிழிவு நோய்க்குப் பாகலிலைச் சாற்றில் உளுந்தளவு பெருங்காயப் பொடியைச் சேர்த்து உட்கொண்டால் நாளுக்கு நாள் நோய் குணமாகி வரும்.

காச நோய்க்குப் பாகலிலைச் சாற்றில் மோர் கலந்து காலையில் பருகி வருதல் வேண்டும். சிரங்கு நோய் நீங்குதற்குப் பாகலிலைச் சாற்றில் காசுக் கட்டியை உரைத்துப் பூசிவந்தால் சிரங்கு காய்ந்து உதிர்ந்துவிடும். விஷகடிக்குப் பாகலிலையை அரைத்துக் கடிவாய்க்கு மேற் பாகத்தில் பூசினால் விஷம் ஏறாது.

பாகலுக்குத் தமிழிலும் வட மொழியிலும் பல பெயர்கள் உண்டு. வட மொழியில் காரவேல்ல என்னும் பெயர் காரலி, காருல, கரில்லா கரேலு, காரேதி, காக்ர என வழங்குவன. தமிழில் கஞ்சிபேலு. கஞ்சால் என வழங்குவன.

பாகலில் பல இனங்கள் உள்ளன. கரும்பாகல், கொம்புப்பாகல், மிதிபாகல், வெள்ளைப்பாகல் என்பன சாதாரணமானவை. பாகலில் புரதச்சத்து, கொழுப்புச் சத்து, மாச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, உயிர்ச்சத்து ஏ. பி சி. என்பன போதியளவுண்டு. பாகற்காய் பத்தியத்துக்கு ஆகாது.

பாகற்காயைப் பற்றிய பழமொழிகள் பலவுண்டு. இக்கரையிற் பாகலுக்கு அக்கரையில் பந்தல், பத்தியோட பாகற்காய் சட்டியோடே தீயுது. பாகற்காய் விற்ற கூடை பணக் கூடை. ★

---

சங்கீத உணர்வு இல்லாதவன் சங்கீத இன்னிசை ஒலிகளின் ஒருமிப்பில் மனம் நெகிழாதவன், சூழ்ச்சி, நாசம், நயவஞ்சகம் முதலியவற்றிற்கே தகுதியானவன். அவனை எவரும் நம்பவேண்டாம்.

— ஷேக்ஸ்பியர்



## விபுலானந்த அடிகள்

அடிகளார் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராய் இருந்தகாலத்தில் மருதனுமடத்தினருகில் ஒரு வீட்டில் அறிஞர்கள் கூடியிருந்து பேசுவது வழக்கமாயிருந்தது. அக்கூட்டத்திலே யோகசுவாமிகளின் தொண்டர்கள் சிலரும் கூடுவது வழக்கம். சில வேளைகளில் யோகசுவாமிகளும் அங்கு சென்று அருளுரை வழங்குவதும் தியானத்தமர்வதும் வழக்கம். அக்கூட்டத்தவருள் விபுலானந்தர், மகாலிங்கசிவம், நவநீத கிருஷ்ண பாரதியார், மயில்வாகனம் அவர்கள், வைரமுத்து அவர்கள் அதிகமாக அங்கே வந்து போவதுண்டு. இவர்களின் நட்பு நீண்ட காலம் நிலைத்து நின்றது. அடிகளார் மறைந்ததைக் கேட்டு மனமுருகிய நவநீத கிருஷ்ண பாரதியார் நெஞ்சையுருக்கும் பாடல்கள் பாடியுள்ளார்.

யாழ் உற்றோம் செந்தமிழ்க்காம் பாணர் இசையுற்றோம்
வீழ்உற்ற ஆல்போல் வீறுற்றே — வாழ்வற்றோம்
என்று விபுலானந்தா! இங்கிருந்தோம் நீ பிரிந்தே
சென்று விட்டாய் எங்களிப்பைக் கொண்டு.

பூணுந் துறவழகும் போற்று தமிழ்த் தொண்டழகும்
பேணும் மழலையருட் பேச்சழகும் — காணுநெறி
ஏதுவிபு லானந்த என்றரற்ற வாளாநீ
போதுதலோ நிற்காகும் பொற்பு,

❊

---

### நூறாண்டுகளுக்கு முன்

கொழும்பு நூதனசாலை 1-1-1877இல் ஆரம்பிக்கப் பட்டது.

கொழும்பிலிருந்து மொறட்டுவா வரை புகையிரதப் போக்கு 1-3-1877இல் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைக் குடிசனத் தொகை 2400380.

---

### இவ்வாறு சொன்னவர் யாவர்? விடைகள்.

1. காந்தியடிகள் 2. ரால்ஸ் ராய் 3. சிங்சௌ
4. கிறஸ் 5. மார்க்கஸ் அரேலியர் 6. இக்பால்
7. ஓர் அறிஞர் 8. சிங்சௌ 9. சிங்சௌ
10. மாக்சிம் கார்க்கி

---

★ ஆயிரம் ஆண்டு பயன்படுவது பனை ★

# நாவலர் நன்மொழிகள்

## தானம்



தானமாவது தவநெறியால் வந்த பொருளை சற்பாத்திரமா யுள்ளவருக்குச் சிரத்தையோடு கொடுத்தல். பாவத்தால் வந்த பிறன் பொருளைக்கொடுத்தால், தருமம் பொருளுடையார் மேலும், பாவம் பொருள் கொடுத்தார் மேலும் நிற்கும். சிரத்தையெனினும், பிரீதியெனினும், ஆதரவெனினும், பக்தியெனினும், விசுவாசமெனினும், அன்பெனினும், பற்றெனினும் பொருந்தும். குருடர், மூடவர், சிறு குழந்தைகள், தரித்திரர், வியாதியாளர், வயோதிபர் என்னும் இவர்களும் தானபாத்திரமாவர். அன்னதான முதலியவற்றை இவர்களுக்குப் பண்ணலே தருமம்.

## கல்வி

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப்பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கல்வியெனினும் வித்தையெனினும் பொருந்தும், உயர்குலமும், அழகும், செல்வமும் உடையவராயினும் கல்வியில்லாதவர் முருக்கம்பூவுக்குச் சமமாவர். கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக்கற்றல் வேண்டும். கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்து கொண்டே வரும். ஆதலினால், கல்வியைச் சிறிது கற்ற மாத்திரத்தால் அமையாது மேலும் மேலும் கற்றல் வேண்டும். ★

# பொய்சொல்லக் கூடாது பாப்பா

அவந்தி நாட்டை ஆண்ட சுதயவன் என்னும் அரசனுக்கு நளன் என்னும் நண்பன் ஒருவன் இருந்தான். இருவரும் சிலசமயம் பூஞ்சோலையில் வேடிக்கையாகப் பொழுது போக்குவதுண்டு, ஒருநாள் இவர்கள் பொழுதுபோக்கிக் கொண்டிருந்த சமயம் மகரிஷி எனமதிப்புப்பெற்ற முனிவர் ஒருவரின் மனைவி அவ்வழியாலே போனாள். அவளைக் கண்டதும் நளன் அவளின் அழகு, நடை உடை இவற்றைப் பற்றிப் பேசிப் பரிகாசஞ் செய்தான். அரசன் அவனோடு சேர்ந்து சிரித்து மகிழ்ந்தான்.

தன்னைக் கேலி செய்தவர்களைப்பற்றி முனிவரின் மனைவி முனிவரிடம் முறையிட்டாள். முனிவர் கோபங் கொண்டு மன்னனிடம் அதைக் கூறினர். மன்னன் முனிவரிடம் வேடிக்கையாக "நான் அரசன்அல்ல" என்று கூறினான். முனிவர் சினங்கொண்டு அப்படியேயாகுக என்றார். முனிவர் சொல் பலித்தது. மன்னனுக்குக் கெட்ட காலம் உண்டானது. அவன் வலிமை குன்றியது. பகையரசர் அவன் நாட்டைப் பிடித்து அவன்அரசையும் கைப்பற்றினர். ★

# சுக்கிர நீதி

**************

## நல்லவை

1. நல்லார் இணக்கத்தால் அறமும் இன்பமும் உண்டாகும்.
2. நன் மக்களாற் சூழப்பெறுவோன் விளக்கமெய்துவன்.
3. இன்சொல் எப்பொழுதும் உலகத்தை மகிழ்விக்கும்.
4. நல்லறிவுடையோன் துன்புறினும் இன்சொல்லே கூறுவான்.
5. இன்சொற்கள் குயிலோசையினும் இனிமையானவையாகும்.
6. இன்சொல் கூறுவோர் மனிதவுடலிலும் தேவராவர்.
7. அருளும் நட்பும் கொடையும் இன்சொல்லும் உயர்ந்தவை.
8. தாய் தந்தையரைக் கடவுளோடு ஒப்ப மதித்தல் வேண்டும்.
9. சுற்றத்தாரையும் நண்பரையும் தன்னைப்போல் மதித்தல் வேண்டும்.

## ஆததாயிகள் — கொடியவர்கள்

வீட்டுக்கு நெருப்புவைப்போர்
நஞ்சிட்டுக் கொலைசெய்வோர்
ஆயுதங்களாற் கொலைசெய்வோர்
பிறர்பொருளைக் கவர்வோர்
பிறர் நிலத்தை அபகரிப்போர்
பிறர் மனையை நயப்பவர்

## தனித்தனி சிறப்புத்தருவன


| | |
|---|---|
| குதிரைக்கு | விரைவு நடை |
| எருதுக்கு | சுமை தாங்குதல் |
| பசுவுக்கு | பால்வளம் |
| இரத்தினத்துக்கு | ஒளிமயம் |
| அரசுக்கு | பொறுமை |
| இசையாளனுக்கு | இனிய குரல் |
| பொருளாளனுக்கு | கொடை |
| தவத்தருக்கு | பொறை |
| பெண்களுக்கு | கற்பு |

## தமிழில் வழங்கும் அரபுச் சொற்கள் சில

| | | |
|---|---|---|
| அசல் | கரார் | பாக்கி |
| அத்து | கைது | மாசூல் |
| அமல் | சாமான் | மாமூல் |
| ஆஜர் | தகரார் | மாஜி |
| ஆசாமி | தயார் | வக்கீல் |
| இனம் | நகல் | வசூல் |
| கச்சேரி | நபர் | ஜாஸ்தி |

★ இல்வாழ்வுக்கான எல்லாந்தருவது பனை ★

# மண் குதிரை



— கர்ணன் —

ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் வேதபுரீஸ்வரன் வீட்டில் சண்பகம் வேலைக்காரி. கணவனை இழந்த அவள் கைக்குழந்தை சிவராமனுடன் அவ்வீட்டில் தஞ்சம் புகுந்தவள். தனது கடும் உழைப்பினாலும், வேலை விசுவாசத்தாலும், நன் நடத்தையாலும் எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றாள். ஓர் உத்தமியாகவே வாழ்ந்தாள். வேலை செய்தாள்.

மூத்த பெண்ணுக்குத் திருமண நாளின் முதல்வாரம் வீட்டிலுள்ள எல்லோருக்கும் விரும்பிய பொருள்களை விதம்விதமாக வாங்கிக்கொடுக்க முற்பட்ட வேதபுரீஸ்வரர், 'சண்பகம்! உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். சண்பகம் தன் மகனை அணைத்தவாறே அவன் தலையைத் தடவிக் கொண்டு, ''ஐயா அவர்கள் இவன் கண்ணைத் திறந்துவிடுதல் வேண்டும். அதுவொன்றே போதும் ஐயா.'' என்று இரந்து வேண்டினாள். ஆண் தனக்காக வாழ்கிறான். பெண் அடுத்த தலைமுறைக்காக வாழ்கிறாள்.

சிவராமன் படிப்பில் மகா விவேகியாய் முன்னணியில் பிரகாசித்து வந்தான். சண்பகம் அவனுடைய உடல் வளர்ச்சியையும் உள்ளத்தின் வளர்ச்சியையும் கண்டு கண்டு பெருமிதம் அடைந்து வந்தாள். தன் மகனுக்கு எவ்வித துன்பமும் உண்டாகக்கூடாது என்று கருதித் தன்னை ஒறுத்து அவனை வளர்த்து வந்தாள். பீ. ஏ. படிக்கும் தன் மகன் பரீட்சையில் சித்தியடைந்து உத்தியோகம் ஏற்றுப் பெரிய இடத்தில் திருமணஞ் செய்து, தன் மகனும் மருமகளும் தன்னைத் தாங்குவார்கள் என்று நினைத்தாள்.

சிவராமன் கழிந்த இரண்டு நாட்களாகக் கல்லூரிக்குப் போகவில்லை. கண்திறக்க முடியாமல் காய்ந்த சுரம், அன்றைக்குத்தான் ஓரளவு குறைந்திருந்தது. படுக்கையில் எழுந்திருந்தவன் தங்கள் வீட்டின் சுற்றாடலைப் பார்த்தான். சேரியிலும் சேரியாக இருந்த வாய்க்காலிலிருந்து துர்க்கந்தம் வீசிக்கொண்டிருந்தது. அடுப்பங்கரையில் அம்மா அவனுக்குப் பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அவளின் கோலமும், உடையும் அவனுக்கு ஒரு வெறுப்புணர்ச்சியை உண்டாக்கின. மல்லிகாவின் சிநேகம் உண்டான நாள் முதல் அவனுக்குத் தன் தாய் மீதும் தன் சூழல் மீதும் ஒருவகை வெறுப்பு உண்டாயது.

கட்டிலினின்றும் அவன் எழுந்து முகங்கழுவி நல்ல உடையணிந்து மல்லிகாவைப் பார்ப்பதற்கு வெளியே போக ஆயத்தமானான். மல்லிகா பணக்கார வீட்டுப் பெண். அவனைப்போல பீ. ஏ. வகுப்பில் படித்தவள். இருவரும் சிநேகம் கொண்டு இடையிடை சந்தித்து மனம் விட்டுப் பேசி வந்தார்கள். தான் பரீட்சையில் தேறி உத்தியோகம் ஏற்கும் அதே மாதத்தில் அவளைத் திருமணம் செய்வதாக உறுதிகூறியிருந்தான்.

எவளைக் காண்பதற்கு உடுத்து வெளியேறினானோ அவளே அவனைத் தேடி அவன் வீட்டு வாசலுக்கு வந்து விட்டாள். இரண்டு நாள்களாகச் சிவராமனைக் காணாத அவள், அவன் வீட்டுக்கே வந்துவிட்டாள்.

''ஏன் இரண்டு நாட்களாகக் காணவில்லை.'' என்று மல்லிகா கேட்டதை உள்ளிருந்து கேட்ட சண்பகம், வெளியே வந்தாள். ''யாரது'' என்று வந்தவளைப்பற்றி மகனிடம் கேட்டாள். சிவராமனுக்குப் பயம் உண்டானது. தன் காதலி தன் குழலைப்பற்றி என்ன நினைக்கப் போகிறாளோ என்று அஞ்சினான். அதற்குள் மல்லிகா அவனைப் பார்த்து, ''இந்த அம்மா யார்? என்று கேட்டாள். சிவராமனுக்கு வெயர்வை உண்டானது. ''இவள் ஏன் இங்கே வந்தாள் என்று தாயை வெறித்துப் பார்த்தான். தலையைக் குனிந்தவாறே, இவள் எங்கள் வீட்டு வேலைக்காரி.'' என்று உண்மையை மறைக்க முற்பட்டவன் படபடப்போடு கூறினான்.

நான் வேலைக்காரியா...... சண்பகத்தின் உடம்பில், உணர்வில், உயிரில், உயிருக்கும் மேலான ஒன்றில் மளுக்கென்று என்னவோ முறிந்தது.

தாயையும் பிள்ளையையும் பார்த்துக்கொண்டிருந்த மல்லிகா தான் வந்ததை மறந்து மெள்ளச் சென்று மறைந்துவிட்டாள். மூன்று நாள்களின்பின் சிவராமனுக்கு ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் படித்தான்.

''உங்கள் நிலைமையை நன்கு அறிந்துகொண்டுதான் உங்களை நேசித்தேன். உங்கள் அம்மா தாய்மையின் சிகரம். போலிக் கௌரவத்துக்காகப் பெற்ற தாயை வேலைக்காரி என்று சொல்லும் மண்குதிரையை நம்பி வாழ்க்கை என்னும் ஆற்றில் இறங்க நான் தயாரில்லை. என்னை மறந்துவிடுங்கள்.''

— மல்லிகா

சுழலும் உலகத்தோடு சிவராமனும் சுழன்றான்.

(கலைக்கதிரில் வெளிவந்ததன் சுருக்கம்)

★

# உருளைக்கிழங்கு

நல்லமுறையில் யாழ்ப்பாணத்துக்கு விதைக் கிழங்குகள் கிடைக்குமாயின், இப்பிரதேசத்துப் பொருளாதார வளம் மிகவும் சிறக்கும் என்பதற்கு உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை உதாரணமாக விளங்குகிறது. அயர்லாந்து மக்களின் பிரதான உணவாக உள்ள இக் கிழங்கின் பூர்வோத்தரம் தென்னமெரிக்காவில் பெரு, பொலிவியாப் பிரதேசங்கள் என்பர். அங்கு சென்ற ஸ்பானியர் உருளைக் கிழங்கையும் வத்தாளங்கிழங்கையும் ஐரோப்பாவில் பரப்பினர். அங்கிருந்து ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் இவை பரவியுள்ளன.

உருளைக்கிழங்கில் மாப்பொருளும், உலோகச்சத்தும் உயிர்ச்சத்தும் உள்ளன என்னும் இதனைத் தோல் சீவாமல் பயன்செய்தல் வேண்டும் என்றும் கூறுவர். ★

## மூக்கிரட்டை

தோட்ட வரம்புகளிலும் வீதியோரங்களிலும் கொல்லைப் புறத்திலும் அதிகமாக முளைத்துத் தேடுவாரற்றுக் கிடக்கும் ஒரு பச்சிலைக்கு மூக்கிரட்டை என்று பெயர். எங்கள் மூக்கைப் போல இதனமைப்பு இருப்பதால் இதை இங்ஙனம் கூறுவர் போலும். சிலர் இதைத் தொய்யில் எனவும் வழங்குவர். இது சில இடங்களில் வெண்பச்சை நிறத்திலும் உண்டாவது. குத்துக் குத்தாக உண்டாகிக் குறுகிய கொடியாகப் படர்ந்து கிடக்கும். இதை வேருடன் பிடுங்கி மிக மலிவாக விற்பார்கள். காய்கறித் தோட்டங்களில் இது களை எனக் கருதப்படுகிறது. இதை நம்மவர் அதிகமாகக் கவனிப்பதில்லை. புழைக்கடைப் பச்சிலைக்கு வீரியமில்லை.

மூக்கிரட்டைக்குச் செந்நாடிக்கா, திரிலச்சதா, புட்கம் முதலிய பெயர்களும் உண்டு. வடஇந்தியாவில் இதைப் புனர்நவா என்பர். புனர்நவா என்றால் மறுமலர்ச்சி என்பதே பொருளாகையால் இதனை உண்டவருக்கோ உபயோகித்தவருக்கோ உடம்பிலோ உள்ளத்திலோ ஏதோ ஒருவித மறுமலர்ச்சி உண்டாகும் போலும்.

மழைக்காலத்தில் மிகவதிகமாக உண்டாகி வளரும் இப்பச்சிலை, சிறுநீரை வெளியேற்றும். மலச்சிக்கலைப் போக்கும். பசியை உண்டாக்கும் வயிற்று நோய்களையும், இருதய நோய்களையும் நீக்கும. எல்லாவற்றுக்கும் மேலாகக் கண்பார்வைக்கு மிகமிக நல்லது. இன்னும் உடம்பிலுள்ள வாதம் பித்தம கபம் ஆகிய திரிதோஷங்களை ஒழுங்கு செய்யும். தோலில் உண்டாகும் சிரங்கு, வீக்கம், முதலிய நோய்களுக்கு இதை வாட்டிக் கட்டினால் உடனடியாகப் பயன் தெரியும்.

### உபயோகம்

மூக்கிரட்டையைப் பலவிதமாகப் பயன் செய்வர். சிலர் பச்சையாகவும் சிலர் உலர்த்தியும் உபயோகிப்பர். இதனைக் கொய்து நன்றாகக் கழுவிக் குளிர்ந்த நீரில் சிறிது நேரம் ஊறவிட்டு வடித்து எடுத்துத் துவைத்துப் பிழிந்து சாறு எடுத்துத் தேனுடன் கலந்து காலையில் உட்கொண்டு வந்தால் நோய்கள் உண்டாகமாட்டா. செடியை நன்றாக உலர்த்தி இடித்துப் பொடியாக்கியும் வெந்நீரிலிட்டுப் பருகலாம். இலையை அவித்தும் பருகலாம். இதன் சாறு கண்ணோய்க்குக் கைகண்ட மருந்து என்று ஆராய்ந்துள்ளனர். ★


மூக்கிரட்டையின் வேரிற் செய்த சூரணம் மலத்தை இளக்கும் தன்மையுள்ளது.


## வண்ணை வைத்தீசுவரப் பெருமான்

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலையண்டி வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளிடம் கல்வி கற்றவர்களுள் இருபாலைச் சேனாதிராய முதலியாரும் ஒருவர். சேனாதிராய முதலியாரின் உத்தம மாணவருள் ஆறுமுக நாவலரும் ஒருவராவர். தம்பிரான் சுவாமிகள் வைத்தீசுவரப் பெருமான் மீது பாடிய பாடல்களில் ஒன்று வருமாறு.

நதியரவ மதியிதழி புரிசடை யவிழ்ந்து நட
    நண்ணுமா காச லிங்கம்
நால்வருக் குக்கலா னிழலினால் லுபதேசம்
    நவிலுற்ற மவுன லிங்கம்
நிதிபதித னன்புடைத் தோழனா யீசாச
    நிலைநின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழற்கம்ப வடிவாகி
    நின்றெழுஞ் சோதி லிங்கம்.

துதிதுதிக் கையானை யன்பொடும் போற்றிடுஞ்
    சுயம்பான வப்பு லிங்கம்
துய்யவுணர் வோரிதய கமலா லயத்திலெழு
    சுடர்பொற் கொழுந்து லிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும்
    வண்ணையெல் லையி னிறுத்தும்
மாதங்க புரிதையல் பாகமிசை மீதமரும்
    வைத்தீச மாலிங் கமே. ★





## யோக சுவாமிகள் அருள்மொழிகள்

1. கடவுளால் ஆன்மாவைப் பிரிந்திருக்க முடியாது.
2. ஆன்மாவை உன்னால் அளக்க முடியாது.
3. உலகத்தை திருத்துமுன் உன்னைத் திருத்திக்கொள்.
4. ஆசையை அகற்றிப் பிறவியை இலலாமற் செய்யலாம்
5. அலைகிற மனத்தை அடக்கத் தேவாரம் படிக்கலாம்.
6. பொறுமை, தயை, அன்பு வளர்த்தல் வேண்டும்.
7. காமம் குரோதம் முதலிய களைகளைக் களையவேண்டும்.
8. கைவிரல்கள் போலத் தனித்தும் கூடியும் இருக்கலாம்
9. தியானஞ் செய்தால் அதுவும் நல்ல வேலை.
10. மனக்குழப்பம் இன்றேல் காரியம் சித்தியாகும்.
11. தன்னை எங்கும் பார்த்தல் பெரிய இரகசியம்.
12. உள்ள பொழுது தானதருமஞ் செய்ய வேண்டும்.
13. வேலைகளை செவ்வனே செய்தலே யோகம்.
14. எந்த நேரமும் கடவுள் உன்னுடன் இருக்கிறார்.
15. கடமையைச் செய்வதனால் ஞானம் உண்டாகிறது.

மில்க்வைற் செய்தி - 16
பெற விரும்புவோர்
மெடிக்கேட்டட் அல்லது நீம்
வாசனை சோப் அல்லது பார் சோப் 2 மேலுறைகள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நாம் பணக்காரர்களாக இருக்கக் கடமைப்பட்டில்லை; ஆனால் ஒழுக்கமுள்ளவரர்க இருக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.
— பெர்னார்ட்ஷா

## உழுந்து

தானிய வகைகளில் புரதச்சத்தும் ஊட்டச் சத்தும் நிறைந்த பருப்பு வகையில் உழுந்து சிறப்பிடம் வகிக்கிறது. வடை, முறுக்கு, இட்டலி, தோசை, வடகம், அப்பளம் இன்னும் எத்தனை எத்தனை உணவுவகைகள் வேண்டுமோ அவற்றுக்கெல்லாம் உருசியும் ஊட்டமும் தருகின்ற உழுந்து எங்கள் நாட்டில், அதுவும் வரண்ட பிரதேசங்களில் நன்றுகப் பயன்தருகிறது என்பதை எல்லோரும் நன்கறிந்துவிட்டார்கள்.

வானம் வரண்டாலும் உழுந்தை உண்டாக்கிக் கொள்ளலாம். அறுவடைக்குப்பின் நெல் வயல்களில் உழுந்து விதைத்துப் பயன்பெற்றவர்களைக் கைதூக்கி விடுவதற்கு விற்பனைத் திணைக்களம் விலைவகுத்து வேண்டிய அளவு வாங்கி ஆதரிக்கிறது. இந்த வாய்ப்பைத் தவற விடாமல், வரண்ட பகுதிகளில் குடியேறி வாழ்பவர்கள் எல்லோரும் தங்கள் நிலத்தில் உழுந்து பயிரிட்டுப் பயன் பெற்றுல் நாடு சுபீட்டமாகும். நமது வாழ்வும் வழம் பெறும். சின்னஞ்சிறிய பாத்திகளிலும் வீட்டுத் தேவை கருதி உழுந்தினை விரும்பிப் பயிரிடுவோமாக. உடைத்து வைத்த உழுந்து உழுத்துப்போகாமல் நீண்டகாலம் உதவும் என்பதை எல்லோரும் அறிவர். ★

## அருஞ்சொல்லும் அதன் கருத்தும்

| | |
|---|---|
| அங்காடி | கடைவீதி |
| அகவை | வயது |
| அந்தி | முச்சத்தி |
| அவ்வியம் | வஞ்சகம் |
| அழுவம் | பரப்பு |
| அறுவை | புடைவை |
| அறை | கற்பாறை |
| ஆணு | ஆதாரம் |
| இமயவன் | சிவன் |
| இயங்கள் | வாத்தியங்கள் |
| இரியல் | விரைந்து செல்லல் |
| இவிளி | குதிரை |
| உணக்குதல் | வாட்டுதல் |
| உருத்தல் | கோபித்தல் |
| எல்லா | தோழி |
| எழினி | திரைச்சீலை |
| ஏதிலார் | அயலார் |
| ஐயர் | மூத்தவர் |
| ஓசனித்தல் | முயலல் |
| ஓதம் | வெள்ளம் |

உயர்ந்தோர் தோஷங்களாலேயே உருப் பெற்றவர் என்பர்.

— ஷேக்ஸ்பியர்

## உங்களுக்குத் தெரியுமா?

1. செந்நிற மழை பொழியும் இடம்.
2. நீல நிறச் சேறுள்ள கடற்கரை.
3. இந்தியாவில் அதிகம் வழங்கும் மொழி.
4. முயற்சியே கடமை என்று கூறும் நாடு.
5. உலகில் அதிக பருத்தி விளையும் நாடு.
6. சூரியனின் மகள் எனப்படுவது.
7. உலகில் நல்ல பருத்தி விளையும் நாடு
8. தொழிற் புரட்சி முதலில் தோன்றிய நாடு.
9. பாற் பண்ணைக்குப் பெயர் போன நாடு.
10. அதிக பால் தரும் பசு இனம்.
11. மிகக் குளிர்ந்த பிரதேசத்தில் வாழும் பறவை.
12. மரம் அரியும் தொழில் அதிகமுள்ள நாடு.

(விடைகள் வேறு பக்கத்தில்)


## உபநிடத மகா வாக்கியங்கள்

1. கருவிகரணங்கள் புனிதமடையத் துறவும் தொண்டும் தேவை.
2. தூய உள்ளத்தில் தியான வாயிலாகப் பரமனை அறியலாம்.
3. இந்திரியங்களை அடக்கியாளுதல் முறையான யோக மார்க்கம்.
4. இறைவன் ஆணுமல்ல பெண்ணுமல்ல அலியுமல்ல.
5. இறைவனுகிய அகண்ட வஸ்துவுக்கு அன்னியமாக எதுவுமில்லை.
6. இறைவன் அனைத்தையும் அடக்கி ஆள்கின்ற உள் ஒளி.
7. பரம்பொருளை அடைவதற்குத் தியாகமே நேரான வழி.
8. முனிவர்கள் தியாகத்தின் மூலம் இறைவனை அடைகின்றனர்.
9. நுண்ணறிவுடையவரும் தியானமின்றேல் இறைவனைக் காணமுடியாது.
10. பரமாத்மன் ஜீவாத்மாவில் அந்தர்யாமியாய் இருக்கிறுர்.

## வேப்பம் பூ

வேப்ப மரங்கள் இலையுதிர்த்திப் பூக்கவாரம்பிக்கின்றன. இன்னுமொரு மாத காலத்துக்கு வேப்பம் பூ அதிகமாகக் கிடைக்கும். கிடைக்கும் போது நாம் ஓரளவு பூக்களைக் கொய்து உலரவிட்டு வடகஞ் செய்து கொள்ளலாம். எமக்கு வாய்ப்பாக உழுந்தின் விலையும் குறைந்துள்ளது. வேப்பம்பூவடகம் சமிபாட்டுக்கு உதவி செய்வதோடு சில நோய்களையும் நீக்குந் தன்மை உள்ளது. ★

★ ஐயமென வந்தவர்க்கு ஆதரவு பணி ★



## காந்தியடிகளின் வாழ்வில்

தென்னாபிரிக்காவில் இந்தியர்கள் சத்தியாக்கிரகம் செய்த ஒழுங்கையும் அமைப்பையும் அந்நாட்டு அரசாங்கம் வியந்து போற்றி மகிழ்ந்து கொண்டது. அதனால் அரசாங்கம் காந்தியடிகளையும் பிற தலைவர்களையும் ஆறு வாரத்துள் சிறைத்தண்டனையை நீத்து அவர்களை வெளியே போக விட்டது. அன்றி தளபதி ஸ்மட்ஸ் இந்திய மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்கு ஒரு ஆணைச் சபையையும் நியமித்தார். ஆனால் காந்தியடிகள் அந்த ஆணைச் சபையில் இடம் பெற்ற சில ஆட்களின் போக்கை விரும்பாதவராகையால் அவர்களை நீக்குமாறும் அன்றேல் பிறிதொரு சத்தியாக்கிரகம் செய்வதாகவும் கூறினார். ஆனால் இதற்குள் றெயில்வே ஊழியராய ஐரோப்பியர் வேலைத்தளக் குறைபாடுகள் காரணமாக வேலை நிறுத்தஞ் செய்தார்கள்.

இந் நிலைமையில் காந்தியடிகள் தமது பெருந் தன்மையை அரசாங்கத்துக்குக் காட்டினார். சத்தியாக்கிரகத்தைப் பின் போட்டார். இதனால் அரசாங்கத்து ஐரோப்பியர் பலர் அடிகளை வியந்தார்கள்.

காந்தியடிகளும் தளபதி ஸ்மட்சும் சந்தித்துப் பேசினார்கள். ஆணைச் சபையில் இந்தியன் ஒருத்தனும் இடம் பெறுதல் வேண்டும் என்று அடிகள் கேட்டதை ஸ்மட்ஸ் அனுமதிக்க மறுத்தார். காலக் கிரமத்தில் ஆணைச் சபையின் ஆலோசனையின் வண்ணம் இந்திய மக்களுக்குச் சில சலுகைகள் அளிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. சத்தியாக்கிரகம் பெருவெற்றியீட்டியது. காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் தமது கடமை நிறைவேறிற்று எனக் கண்டார். அவர் கேப் பட்டணத்தை விட்டு 18-7-1914 இல் புறப்படுமுன் அவரையும் கஸ்தூரி பாவையும் நகர் முழுதும் ஊர்வலமாக அழைத்து உபசரித்து மக்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இந்திய மக்கள் தங்கள் அன்பளிப்பாகக் கஸ்தூரிபாவுக்கு ஒரு தங்கச் சங்கிலியைக் கொடுத்தார்கள். ஆனால் அவர் அதனை மக்கள் பணிக்கே உதவும்படி திருப்பிக் கொடுத்து விட்டார். காந்தியடிகள் கோகலேயுடன் கலந்து பேசுவதற்கு இங்குலாந்துக்குப் போனார். ★

### உங்களுக்குத் தெரியுமா? தெரியுமே!

1. இத்தாலி 2. பசுபிக் 3. இந்தி 4. ருசியா
5. அமெரிக்கா 6. பருத்தி 7. எகிப்து 8. இங்கிலாந்து
9. டென்மார்க் 10. பிறிசியன் 11. பென்குயின்
12. கனடா

பேசாத வார்த்தைக்கு நீ எசமான், பேசின வார்த்தை உனக்கு எசமான்.

— பழமொழி

## சாரணச் சிறுவன்

"யான் கடவுளுக்காகவும், அரசனுக்காசவும், தேசத்திற்காகவும் உழைக்கத் தயாராய் இருக்கிறேன்" என்று தன் வாழ்க்கையின் நோக்கத்தை இந்த வசனத்திற் கூறுமவன் ஒரு சாரணச் சிறுவன்.

1. அவன் உண்மையையே பேசவேண்டியவன். அவன் உண்மையென்று சொல்லுவது மற்றவர் மறுக்கக் கூடாதவாறு இருத்தல் வேண்டும்.
2. அவன் கடவுளுக்கும் அரசனுக்கும் தன் தேசத்துக்கும், தனக்கு மேலதிகாரிகளுக்கும், பெற்றோர்க்கும், தனக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் உண்மையும் விசுவாசமும் உள்ளவனாய் இருத்தல் வேண்டும்.
3. அவன் தனக்குத்தானே உதவியாக இருப்பது மாத்திரமன்றி, மற்றவர்களுக்கு உதவி புரிவதில் ஊக்கம் உள்ளவனாயும் இருத்தல் வேண்டும்.
4. அவன் தன்னை எல்லோருக்கும் நண்பனாகவும், மற்றைய சாரணச் சிறுவர்களைச் சமமாகக்கருதி நடப்பவனாயும் இருத்தல் வேண்டும்.
5. அவன் எல்லாரிடத்திலும் மரியாதையாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.
6. அவன் எவ்வித உயிரினங்களிடத்தும் அன்பு பாராட்டுதல் வேண்டும்.
7. அவன் தனக்குக் கொடுக்கப்படும் கட்டளைகளை எல்லாம் அணுவளவும் மீறாமல் கீழ்ப்படிவுடன் செய்து முடித்தல் வேண்டும்.
8. அவன் எவ்விதத் துன்பங்கள் நேர்ந்தாலும் தன் மன உற்சாகத்தைக் கைவிடக்கூடாது.
9. அவன் தேவையில்லாத வழிகளில் வீணாகப் பணத்தைச் செலவு செய்தல் ஆகாது.
10. அவன் எல்லோருக்கும் நன்மையானதையே நினைத்து, நன்மையானதையே பேசி, நன்மையானதையே செய்தல் வேண்டும். ★

## அருள் விருந்து

பேச்சுக் குறையுமளவிற்குப் பண்பு வளருகிறது.
அறத்தை வளர்ப்பவனை அறம் வளர்க்கிறது.
அன்பு வளருமளவுக்கு வள்ளல் தன்மை வளரும்.
மனிதருக்கு வரும் கேடுகள் நிலைத்திருப்பதில்லை.
கஷ்ட காலத்தைச் சமாளிப்பது ஆண்மை.
உனக்கு இனியவனாகில் பிறர்க்கு நல்லவனாயிரு:
குற்றத்தை மன்னிக்குந் தன்மை அன்புக்கு உண்டு.
உபவாசம் என்பது இறைவனைப் பற்றி எண்ணுதல்.
பிறருக்குச் சேவை செய்தல் எமது மனதுக்குச் சாந்தி.
நன்மை செய்யத் தெரிந்தவன் அதைச் செய்யாவிட்
— ஆதாரம்; தர்மசக்கரம் — [டால் குற்றவாளி.

★ எண்ணூறு வகையில் உபயோகமாவது பனை ★

# ஐயனர்

ஐயனரை ஐயப்பன் என்றும் கையனர் என்றும் வணங்குவர். அவர் ஞானமயமாயுள்ள சிவபெருமான் திருவருளும், அருள்மயமாயுள்ள திருமால் திருவருளும் ஒருங்கமைந்த பெருமூர்த்தியாவர். அவர் கலியுகத்திற் கண்கண்ட தெய்வமாய் நானிலத்தில் நலிவுற்ருேர் நல்வாழ்வு பெறவும், வறுமையாளர் வளம்பெற்று வாழவும், மெலிவுற்ருேர் மேன்மைபெறவும் பெருங்கருணை பாலித்தருளும் தடங்கடலாய் எழுந்தருளி இருப்பவர்.


சங்கர நாராயண தத்துவமாயுள்ள ஐயப்பன் அரிகர புத்திரனவர். அரிகரபுத்திரன் இருபக்கமும் கூரான வாள் போல அருள்பொழியும் ஒரு தனி மூர்த்தமாவர். அவர் கேரள நாட்டுக் குலதெய்வமாய், எந்நாட்டவர்க்கும் வரமளிக்கும் கடவுளாய் உள்ளவர். அவர் சாதி மத தேச மொழி வேறுபாடின்றித் தம்மைச் சரணடைந்த அடியார்கள் உள்ளும் புறமும் தம்மருள் வெள்ளத்தைப் புகுத்தி அவர்களை ஆனந்தக் கூத்து ஆட வைக்கிருர். அவரருளால் ஆடிப்பாடும் அன்பர் கூட்டத்தைக் காண்பவர், தாமும் மனமுருகித் தம் வாயால் சரணம் ஐயப்பா எனச் சொல்லித் தம்மை அறியாமலே சாய்ந்தாடுகிருர்கள்.

இராமபிரானுற் போற்றப்பெற்ற சபரிப்பாட்டியின் பெயரால் நிலைக்கும் சபரிமலையை இருப்பிடமாகக்கொண்ட ஐயப்பன், எங்குமுள்ள அன்பர்கள் உள்ளத்திலும் துள்ளியாடும் இறைவனுயுமுள்ளார். சபரிமலையப்பன் திருக்கோயிலின் பதினெட்டுப் படிகளிற் படிந்து பணிந்து போவார். பதினெண் புராணங்களிற் காணுப் பக்திப் பெருக்கைக் காண்பர். ஐயப்பர் திருவருளை நாடுவோர் நாற்பத்தெட்டு நாள் விரதமநுட்டித்து வர்ண உடை தரித்து மயிர்களையாது முனிவர்கூட்டம் போல அங்கே சென்று கூடுவர். கூடியாடிப்பாடி மகிழ்ந்து பணிந்து வணங்கும்போது பக்தர்கள் தாமே பாடலியற்றிப் படிப்பதும் உண்டு. அவர்கள் பாடவந்து பாடும் புலவர்கள். அன்பு, பணிவு, அடக்கம், ஆற்றல், அருள் பெற்றுப் போதல் கண்கூடு. சபரிகிரீசன் திருவருள் பெற்று மீண்ட அடியார்கள் நாட்டில் துன்பம் நீங்கி இன்பம் பெருகவும் சாந்தி நிலவவும் தொண்டு செய்வர். ★

## நீம் சுகாதார தூபம்




வெயில் அதிகமாகியும் நுளம்பின் வேதனை குறையவில்லை. காற்றுவீசும் காலம் வரை நுளம்பு தொலையாது. மாலை வேளைகளில் கிணுகிணுத்துக்கொண்டு நம்மீது இரத்தம் உறுஞ்ச வருகின்ற நுளம்புகளை உடனடியாகப் போக்கச் சுலபமான வழி, நீம் சுகாதர தூபத்தைத் தணலிலிட்டுச் சாம்பிராணி போலப் புகைத்தலாகும். நறுமணங் கமழும் மெல்லிய புகை நுளம்புகளை விரட்டிவிட்டு மேலெழுந்து காற்றிற் கலந்துவிடும். நம் வசிப்பிடம் தூய்மையாகி இலட்சுமி கடாட்சம் பெறும்.



## புதுவருட வாழ்த்து

உங்கள் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரிய மில்க்வைற் தாபனத்தார் தங்கள் பொன் விழாப் பொலிவின் போது வருகின்ற புதுவருடத்தில் உங்கள் அபிமானத்துக்கும் ஆதரவுக்கும் இதய பூர்வமாக நன்றி கூறி வாழ்த்தும் குரல்.

சித்திரைப் பாவை சிரித்த முகத்தொடு
இத்தரை வாழ எழுந்தருள் கின்ருள்
பிங்கள வென்னும் பெரும் பெயர் பூண்டு
மங்களம் புரிய வந்தருள் கின்ருள்.

மழை வளம் பெருகவும் மாநிலம் செழிக்கவும்
விளைபொருள் மலியவும் விலைகள் குறையவும்
அன்பு தழைக்கவும் அமைதி நிலைக்கவும்
இன்பம் தங்கவும் ஏர்வளம் பெருகவும்
ஐம்பது ஆண்டுகள் அரும்பெரும் சாதனை
தம்பெயர் நிறுவிய தமிழ் நிலம் தழுவிய
மில்க்வைற் தாபனம் மிகுந்த அன்புடன்
நல்கிடும் வாழ்த்துகள் நன்ரு குகவே.

அறப்பணி பெருகிட ஆதர வளித்த
சிறப்புடை யன்பர்கள் சிந்தை மகிழவே.

## குறிஞ்சிக் குமரன் கோயில்

பேராதனை வளாகத்துக் குறிஞ்சிக் குமரன் கோயிலுக்கான நடராசர், சிவகாமியம்மை, மணிவாசகர் மூர்த்திகள் 30-3-77 இல் மில்க்வைற் தொழிலக முகப்புப் பிள்ளையார் கோயிலிலிருந்து மில்க்வைற் வானில் பவனியாக எடுத்துச் செல்லப் பெற்றன. தொழிலதிபர் மூர்த்திகளை வழியனுப்பி வைத்து மாணவரின் முயற்சியையும் தெய்வப் பணியையும் பாராட்டினர்.

கொடியர் சிலரின் நியமனத்திற்குப் பதிலாக தகுதியற்ற பலர், சிலரைத் தேர்ந்தெடுப்பது என்பதை ஜனநாயகம் ஒரு மாற்ருகக் கொடுத்திருக்கிறது.

— பெர்னர்ட்ஷா

யாழ்ப்பாணம், சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம்; யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1-4-77.